ஐம்பதாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய நாற்பதாவது அறிக்கை, மற்றும்

(2) தமிழ்நாடு அரசின் 1967–68 மற்றும் 1968–69 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்)கணக்குகள் குறித்த இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் தனது முந்தைய அறிக்கைகளிலும் நான்காவது அறிக்கை(ஏழாவது பேரவை) மற்றும் இருபத்தி மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை ஆகியவைகளை நான் இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத தணிக்கைத் துறைத் தலைவரின் 1985–86 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை ; மற்றும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல்பாடு குறித்த பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்தி ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை அகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) அரசு உறுதி மொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன், அரசு உறுதி மொழிக்குழுவின் தலைவர்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழி குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிககையை இப்பேரவைக்கு நான் அளிக்கின்றேன்.